www.tamilarangam.net

# நமது குரல்

இதா



மாதர்தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்

மார்ச் 1989 வெளியீடு 13

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளடக்கம்


நாம் சிறிது பேசுவோம் ---------- 3

வாழியவே ---------- 6

[illegible] ---------- 7

[illegible] ........ ---------- 11

[illegible] .......... ---------- 16

சிறுவர் பகுதி ---------- 18

[illegible] ---------- 21

[illegible] ...... ---------- 25

[illegible] ---------- 32

வாசகர் கடிதம் ---------- 34



Kirchenkreis Herne



INFORMATION ZENTRUM ·
DRITTE WELT

Arbeitsstelle für Frieden
Gerechtigkeit und
Bewahrung der schöpfung
Overweg str 31
4690 Herne 1.
tel: 02323 496970/74


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாம்
## இருந்து பேசுவோம்

ஒன்று சேர்வோம்

கோடைகாலம், மாரிகாலம் என்று வருடங்கள் இந் நாட்டில் பலருக்கு படு வேகமாக ஓடிக் கொண்டிருப்பதாக தோற்றுகிறது

மழை விட்டும் தூறல் நின்ற மாதிரியில்லை, என்றவாறாக தொடரும் எம் நாட்டின் பிரச்சினை எப்போது முடிவுக்கு வரப்போகிறது என்பது சிலரின் அங்கலாய்ப்பு.

1983ம் ஆண்டு யூலை கலவரத்தின் பின்பு பெரும்பாலான தமிழர்கள் பல்வேறு நாடுகளிலும் அகதிகளாக வந்து இறங்கியுள்ளனர். இவர்களில் பலர் நான்கைந்து வருடங்களாக வாழ்ந்து விட்டோமே எப்போது விடிவு பிறக்கப் போகிறது என்றவாறு நிம்மதியற்று அலுத்துக் கொள்கிறார்கள்.

இந்த அலுப்புக்குக் காரணம்; அகதிகளாக இந் நாட்டில் வசிப்பவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உரிமைகள் ஏட்டில் இருந்தும் நடைமுறைப்படுத்தப் படாமல் செயற்கையான தடை ஏற்படுத்தப் பட்டிருப்பதே!

தமிழர் செல்லும் இடமெல்லாம் இந்த உரிமைப் பிரச்சனைதானா? ஆம்! அது ஒரு சாபக்கேடு மாதிரி!... ஆரம்பத்தில் இருந்தே ஏட்டில் உள்ள உரிமைகளை பேணுவதுபோல் நடந்திருந்தால், அது மறுக்கப்பட்டிருக்கமாட்டாது.

'ஒரு பானைக்கு ஒரு சோறு பதம்' என்பது போல் ஒரு சில பகுதியினர் மேற்குறிப்பிட்டதற்கு விதி விலக்கு! அந்த 'ஏட்டு' உரிமைகளை எம்மில் யார் படித்துப் பார்த்தார்? அல்லது எவராவது மற்றவருக்கு விளங்கப்படுத்தினாரா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மேலோட்டமாக உள்ள அந்த 'எட்டு' உரிமைகள் தெளிவற்றன. எந்தக் கால கட்டத்திலும் மறுக்கப்படலாம், அல்லது மாற்றப்படலாம்— சற்று வித்தியாசத்தால் (முழுமையாக அல்ல).

உலகில் எந்த மூலையிலும் உள்ள அகதிக்கு படிப்பு, தொழில், உணவு, உறைவிடம், உடை, உயிர்பாதுகாப்பு, பிரயாணப்பத்திரம், இவை யாவும் எந்தத்தடங்கல் இன்றியும் வழங்கப்பட வேண்டும். இது அந்தந்த நாட்டின் அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது UNHCR அகதிக்கான ஐக்கிய சபை அதி உயர் ஆணையாளரின் வேண்டுகோள்.

கனடா, நோர்வே, டென்மார்க், சுவீடன், மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகளில் மேற்குறித்த உரிமைகள் மதிக்கப்பட்டன. கால இடை வெளிகளில் அவை எம்மவர்களுக்கு படிப்படியாக ஒவ்வொன்றாக மறுக்கப்படுகி ன்றன. மறுப்புக் காரணங்கள் பல கூறப்படலாம்.

உதாரணமாக கேர்னே நகரத்தில் சிறுவர் பாடசாலை செல்லும் தமிழ்ப்பிள்ளைகளுக்கு யூகெஸ்ற் ஆம்ற் இதுவரை தான் செலுத்தி வந்த கட்ட ணத்தைச் செலுத்தமுடியாதென்று மறுப்புத் தெரிவித்துள்ளது. சிறுவர் பாட சாலை செல்லமுடியாத பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று கல்வி பயிலு வது சாத்தியமற்றது. இவையெல்லாம் படிப்படியாக எமது உரிமைகளை மறுப்பதற்கான ஆரம்பமே.

யூகோஸ்லாவிய அகதிகளின் சட்ட விரோதமான வருகையைத் தடுப் பதற்காக, 'சோசல்' உதவி, பணமாக இன்றி, கூப்பன் முறையில் கொடுபட இருப்பதாகவும் சோசல் உதவிபெறும் வேறு வெளிநாட்டவருக்கு உதவிப்பணம் குறைக்கப்பட இருப்பதாகவும் நம்பகமான வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

எவ்வாறு எனினும், மறுக்கப்படும் உரிமைகளைத் தனித்தனியாக சிலர் 'அப்பீல்' பண்ணிப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறார்கள். படிப்பு, தொழில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வசதியான உறைவிடம் இவற்றுக்காக 'தனி நபர்' போராட்டம் ஆங்காங்கே நடக்கிறது.

இலைமறைகாயாக இருக்கும் ஒவ்வொரு 'தனி நப'ரும் ஒன்று சேர்ந்து பலராகி உரிமையைக் கேட்டால் எப்படி இருக்கும்? இது முடியாதது இல்லை! இலைமறை காய்களே வெளியே வாருங்கள்; தங்கள் அறிவின் தீவிரத்தின், அணுகும் முறையின் மகிமையை வெளியில் கொண்டுவாருங்கள்.

இதனைக் கேட்டுத்தான் இந்தப் பகுதியில் இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. இளைய அறிவு ஜீவிகள் சற்று யோசியுங்கள். 'வாழ்ந்தால் உரிமையோடு வாழ்க; இல்லையேல் அவ்வாழ்வே தேவையில்லை' என்ற புது மொழிப்படி நாம் ஒன்றுபடுவோமா?

ஜேர்மனியில் அகதிகளாக வதியும் எல்லா தமிழர்களும் ஒன்றுசேர்ந்த உரிமைக்காக போராடும் அமைப்பு உருவாக வேண்டும். அதன் அங்கத்தவர்கள் ஒருத்தரை ஒருத்தர் அடிக்கடி சந்திக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. எழுத்துமூலம் தொடர்புகளை உண்டாக்கிக் கொள்ளலாம். சந்திக்கும் அவசியம் ஏற்படுத்துமிடத்து, இலக்கியச் சந்திப்பு போல் காலத்திற்குக் காலம் வசதியான இடத்தில் சந்திக்கலாம்.

பரிவர்த்தனை நிலையமாக எமது ஸ்தாபனம் உதவி செய்யும். அதற்காக நாம் காத்திருக்கிறோம். நல்ல பல திட்டங்களைத் தீட்டுவோம். முன்னேற்றகரமானவர்கள் எங்கிருந்தாலும் இந்த விடயத்தில் ஒன்று சேர்வோம் என்று அறைகூவல் விடுக்கிறோம்.

இங்குநமது தரிப்பு தற்காலிகமானது என்ற மனப்பாங்கு வேண்டாம். இது நெடுந்தூர—வெகுநேரப் பிரயாணம் என்பதனை இலங்கையின் நிலைமையை அவதானிக்கும் எவருக்கும் புரியும்.

ஒருவருடம் பூர்த்தியாகும் இந்த வெளியீடு, சிறப்புடன் நிலைத்திருக்க உதவிய வாசகர்களுக்கு நன்றி கூறி 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்பதனை மீண்டும் வலியுறுத்துகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழியவே..!

பெண்விடுதலை, எழுச்சி அதுவேயுள்—தலையாய
எண்ணமென ஆக்கம் பல சுமந்தனை!
வண்ண இதழென்றே திங்கள் தோறும்
பெண்கள் வட்டமென வந்து மகிழ்வித்தாய்!

மாசி எண்பத்தொன்பதில் ஒருவருடம் பூர்த்தி நம்
தேசிய கலாச்சாரம், பண்பாட்டுடனே,
பேசிடும் தாய் மொழியின் மணம் தந்த உனக்கு
ஆசிகூறிவிடும் வாசகர் வட்டம் நாம்.

அன்று பெயர் பெற்றும் பெண்கள் வட்டமென
இன்றோ ஆணும் பெண்ணும் சேர்ந்ததுதான் உலகம்
என்றே உணர்ந்து வந்ததுபோல் இரு இனக்குரலும்
ஒன்று சேர ஒலித்திடும் நமது குரலாகும்!

குரல் நமது குரலாகவே இருந்திடுக — அதில்
கரகரப்பின்றி மெல்லோசையான ஒலி
வரவேண்டுமேயன்றி வல்லோசையல்லவே — உன்
தரந்தனை உயர்த்தி வாழிய! இலக்கியப்பணியுடனே!

— நவீனு —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சித்திரா=பெண்

பார்த்திபன்

மூடமான
சமுதாயக் கட்டுமானங்களைச்
சுமந்து சுமந்து
தேய்ந்துபோன இந்தச்
சிம்மாடுகள்
தங்களுக்குள் இன்னுமொரு சிம்மாடு
பின்னப்படும்போதே
களைத்து விடுகின்றன.
வேண்டாம் சிம்மாடுகள்
வைக்கோலில்.
வைராக்கியத்தில் வளையப்படட்டும்.
ஆம் அவை இந்த
அமைப்பின்
செவிட்டு மௌனத்தைக்
கலைக்க வேண்டும்.
– சிவம்

1.

சிவலிங்கம் கொண்டு வந்த பொருட்களை அலுமாரிக்குள்வைத்துவிட்டு கட்டிலில் வந்தமர்ந்தார். மாலை ஐந்து மணி. ஒரு வகையான அரவாரம் பரவியிருந்தது.

"டொக்ரர் வந்து பாத்தவரே?" கட்டிலில் போர்த்திக் கொண்டு படுத்திருந்த தவமணியைக் கேட்டார்.

"உம். ரண்டுநாளெண்டு சொல்லியிருக்கினம்" என்று சொல்வதற்குள் தவமணியின் மூச்சு சிரமப்பட்டது. வயிற்றின் மேல் மட்டும் போர்வை மேடாகியிருந்தது. ஆஸ்பத்திரிக்கேயுரிய கட்டில், விரிப்புகள், பக்கத்தில்இலாச்சியுடன் கூடிய மேசை, அதன் மேல் சாதாரணமாகக் காணப்படும் சுடுநீர்ப் போத்தல், கிளாஸ், தண்ணீர்ப் போத்தல், ஒரு தோடம்பழம் என்பன.

திறந்திருந்த ஜன்னலினூடாக காற்று மருந்து வாடையைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டிச் சென்றது. நடைபாதையில் நின்று கொண்டு கதைத்தவர்களின் குடு ம்ப ரகசியங்கள் உள்ளேயும் எட்டிப் பார்த்தன.

இரண்டு, மூன்று சிறுவர்கள் மரத்தின் கீழ் நின்று பூக்களைச் சேகரித்துக் கொண்டிருக்க, ஏனைய சிறுவர்கள் ஓடிப்பிடித்து விளையாடினர்கள்.

"அம்மா எத்தினை மணிக்கு வருவா?" தவமணி போர்வையை இலேசாக விலத்தியபடி கேட்டான்.

"பிள்ளையளுக்கு சமைச்சு வைச்சிட்டு ஏழு மணி பஸ் பிடிப்பா என்டு நினைக்கிறன்"

"பாவம் அம்மா. இந்த வயசில அங்க, இஞ்சயென்டு அலையுறா" என்று தவமணி மெல்லமாகச் சொன்னாலும் சிவலிங்கத்திற்குக் கேட்கக் கூடியதாகவிருந்தது. அவருடைய தங்கைகளில் ஒருவர் கூட இரவு வந்து தங்காதலைத அவன் கட்டிக் காட்டுகிறான். இந்த நிலைமையில் அவனைக் கோபித்துக் கொள்ள விரும்பாத சிவலிங்கம் "சுடுதண்ணி வேண்டியாறன்" என்று சொல்லி, சுடுநீர்ப் போத்தலை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரியை விட்டு வெளியில் வந்தார்.

ஆஸ்பத்திரிக்கு நேர் எதிரே பாதைக்கு அப்பால் பலவிதமான கடைகள் திறந்திருந்தன. இரண்டு தேநீர்க் கடைகளின் முன்னால் சைக்கிள்களும் ஆட்களும் நின்றார்கள். ஒரு கடையில் பழைய பாடலுக்காக கண்டசாலா தொண்டையைச் செருமிக் கொண்டிருந்தார்.

"சுடுதண்ணி"

"அங்கால பெடியனிட்டப் போய் வேண்டுங்கோ" என்ற காசாளரின் தலை மறுபக்கம் திரும்பியதும் கருதி மாற்றிக் கொண்டது. "பெடியா இஞ்சால ஐயாவுக்குச் சுடுதண்ணி"

வாங்கில் உட்கார்ந்து இரண்டொருவர் பழைய வடையைக்கடித்துக் கொண்டிருக்க, சிலர் பிளேன்ரீ குடித்தார்கள். ஒருவர் மட்டும் புகைத்துக் கொண்டிருந்தார்.

செப்பு நிறம் மாறியிருந்த உயரமான குடுவை நீராவி மூச்சுவிட, சின்னப் பையன் ஒருவன் அநாயசமாக குழாயைத் திறந்து சுடுநீர்ப் போத்தலை நிரப்பி சிவலிங்கத்திடம் கொடுத்துவிட்டு அடுத்த ரீ போட ஆயத்தமானான்.

காசாளரிடம் பத்துச் சதம் கொடுத்துவிட்டு கடைக்கு வெளியேவந்தவர் பாதையை உடனே கடந்து அப்பால் போக முயற்சிக்காமல் அப்படியே நின்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பஸ்ஸுக்கே எக்கச்சக்கமாப் போட்டுது.கூரை ஒழுகுதெண்டு கைவைக்கப் போய் முழுக் கூரையும் மாத்தினதுக்கு மாறின காசே இன்னும் அடைச்சு முடியேல.ஆஸ்பத்திரி துண்டும் எப்பிடியும் மூண்டு சைபரில வரும்.தார சம்பளத்தை அஞ்சால பெருக்கினாலும் இவ்வளவு செலவுக்கும் காணாது.இதுக்க பிறக்கப் போறதால வாற செலவு '

'பிறக்கப் போறது ஆம்பிளேயோ பொம்பிளேயோவெண்டே தெரியேல'

'பொம்பிளைப் பிள்ளையெண்டா .... ?'

சிவலிங்கம் உடனடியாகச் சிந்தனையைக் கலைத்துக் கொண்டார்.விரைவாக வந்த காரைக் கவனித்து,அது தாண்டியபின் பாதையை கடந்து மறுபடி ஆஸ்பத்திரி வளவுக்குள் பிரவேசித்தார்.

'அவளுக்கும் பொம்பிளைப் பிள்ளையிலதான் விருப்பம்.கொஞ்சப் பேர் கூட எழுதி வைச்சிருக்கிறனெண்டு சொன்னள்.'

'எனக்கு மட்டும் விருப்பமில்லேயே.விருப்பந்தான்.கடைசிக் காலத்தில எங்களைப் பாக்கவும் ஆள் வேணுந்தானே'

'ஆ ..'

மறுபடி சிந்தனை கருச் சிதைவு செய்து கொண்டது."கண்டு பிடிச்சிட்டன்","கண்டு பிடிச்சிட்டன்" என்று சிறுவர்கள் விளையாட்டில் உற்சாகமாகியிருந்தார்கள்.

வாட்டுக்குள் பிரவேசித்து கொர்லிக்ஸ் கரைத்து தவமணியிடம் நீட்டினர்.அவள் முழுவதுமாக எழுந்து உட்காராமல்,உடம்பைகொஞ்சம் மேலே இழுத்து,முதுகைக் கட்டில் கம்பியில் சாய்த்தபடி,பாதியாக நிமிர்ந்தாள்.

"சுடுகுதே?"

"அளவான சூடு"

தவமணி கோர்லிக்ஸை உறிஞ்சிக் குடிக்க,சிவலிங்கம் அவளையேபார்த்தார்.உடம்பு மெலிந்திருக்க,வயிறு மட்டும் வித்தியாசமாக இருந்தது.கண்கள் சிறிது தாழ்ந்து .. வழக்கமான தாய்மைக் கோலங்கள்.தலையில் சில வெள்ளி மயிர்கள் வெட்கப்பட்டன.

"பிள்ளையளுக்கு குளிக்க வார்த்ததே?"

"உம்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சபேசன் இருமிக் கொண்டிருந்தான். மருந்து குடிக்கிறானே?"

"உம்"

"மாதவி அம்மாவை ஆக்கினைப்படுத்தினவனே?"

"உம். ஆ சீசீ ஒழுங்கா இருக்கிறன்" சிவலிங்கம் தனது சிந்தனைகளை பலாத்காரமாகக் கலைக்கப் போராடிக் கொண்டிருந்தார்.

"நீங்கள் வடிவாய் சாப்பிடுறியளே?"

சிவலிங்கம் மனைவியைப் பார்த்தார். அந்தக் கண்களில்தெரிந்த நேசம் அவரை நெகிழ்த்தியது. "ஆறுதலா கதைக்கலாம். முதல் குடி" என்றார்.

இதன் பின் பிறக்கப் போகும் ஜீவனைப் பற்றிய அவருடைய வரவு, செலவுக் கவலைகள் மறந்துவிட்டன. கொர்லிக்ஸ் குடிக்கும் மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆறு வருட தாம்பத்தியத்தில் இரண்டு வருடத்திற்கொன்றாக இரண்டு பிள்ளைகள். மூத்தது ஆணாகப் பிறந்ததில் இருவருக்கும் பாரிய சந்தோசம். இரண்டாவது பிள்ளை அவர்கள் விரும்பியதைப் போல பெண்ணாகவே இருந்ததிலும் சந்தோசம். மூன்றாவது வருகைதான் கவலையுடன் கூடிய எதிர்பார்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

தவமணியிலிருந்து இளமை முற்றாக விடை பெறவில்லை. ஆயினும் முதுமையின் ஆரம்பங்கள் ஓரளவுக்குத் தென்பட்டன. இரண்டு பிள்ளைப் பேற்றால் உண்டான சக்தி இழப்பு, இருபத்திநான்கு மணித்தியால வேலை நேரம் என்பன ஒருவித தளர்ச்சியை உருவாக்கியிருந்தன.

தவமணி குடித்து முடித்துவிட்டு கிளாஸை மேசையில் வைத்தாள். எதுவும் ருசிக்கவில்லை. எண்ணங்கள் முழுவதும் வயிற்றிலிருக்கும் ஜீவனைப் பற்றியே படர்ந்தன.

'என்ன பிள்ளை பிறக்கும்?'

'என்னைப் போலயோ அவரைப் போலயோ முகம் இருக்கும்?'

'வயித்தைப் பாத்திட்டு பொம்பிளைதான் பிறக்குமெண்டு அம்மாசொன்னா. அவ சொன்ன மாதிரி பொம்பிளைதான் பிறக்குமோ?' என்று யோசித்ததும் திடீரென ஒரு ஆயாசம் வந்தது.

'என்னைப் போல வளர்ந்து, கலியாணம் செய்து, பிள்ளைப்பெத்து ... ?'

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றைய உலகம்

# கனடாவில் புதிய அகதிகள் சட்டம்

வட அமெரிக்க குடியேற்ற நாடாகிய கனடாவுக்கு 1983ம் ஆண்டு இலங்கையில் பரவலாக இடம்பெற்ற இனக்குரோத வன்செயலின் பின்பு, பெருமளவு தமிழர் அகதிகளாகச் சென்றனர்.

இலங்கையில் இருந்து மட்டுமல்லாமல், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் தஞ்சம் கோரி இருந்த பல இன அகதிகளும் கனடாவை விரும்பினர். ஏனெனில் அந்நாட்டில் அகதிகளுக்கு தயவுடன் கொடுத்த குடியேற்ற உரிமை, அவர்களைக் கவர்ந்தது.

இதன் விளைவு, அபிவிருத்தி நாடுகளில் இருந்து படையெடுக்கும் கூட்டத்தை தடுப்பதற்கான சட்டம், 1.1.1989 இல் இருந்து அமுலுக்கு கொண்டுவரப் பட்டுள்ளது. இதனைப்பற்றிய விபரங்கள் இங்கே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது:-

தற்போது வரை, கனடாவின் கல்வடிப்பில் அகதிச்சட்டம் நீண்ட விவகாரமாகவே இருந்து கொண்டிருந்தது. ஆறுவருடகால பேச்சுவார்த்தையின் பின் 1.1.1989 தொடக்கம் தஞ்ச நடவடிக்கை, புதிய சட்டத்தின் படி ஏற்படுத்தப்படுகிறது. இது பேச்சுவார்த்தையின் போது எரிச்சலையும் நீதிமன்றங்களில் சவாலையும் ஏற்படுத்தியது.


1982க்குப் பின், கனடிய அரசாங்கம் அகதி அந்தஸ்து ஆலோசனைக்கமிட்டியை (R.S.A.C) அறிமுகப்படுத்தியது. அகதி அந்தஸ்து கோரியவர்கள் தங்களை நிரூபிக்க முயன்றாலும் முயலாமல் விட்டாலும் இக்கமிட்டி விசாலமாக ஆதரித்து, அவர்களது பிரச்சனைகளை அணுகிறார்கள்.

அக்காலக் கட்டத்தில் RSAC கொஞ்ச தூரம் 'கேஸ்' களை கையாள்வதாக எதிர்பார்த்திருந்தது. ஜூலை 1977இல் சில ஐந்நூறு,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

84இல் 7,113 உம், 87இல் 25,945 மாக தஞ்சம் கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 1985இல் ரப்பி குந்தர் பிளவும் வெளியிட்ட அறிக்கையின்படி, 125,000 சனங்கள், கனடாவில் அகதிகளாக தொடர்ந்து இருப்போமா என்று, இறுதி முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவந்தது.



இந்த அறிக்கையில், அகதி சட்ட நடவடிக்கை தீர்மானத்தை மொத்தமாக சீர்திருத்துவதற்கான சிபார்சுகள் காணப்பட்டன. இவற்றில், தொழிலாளர், வேலை, குடியேறு கொரிகைகளுக்கு சம்மதித்து டிசெம்பர் 85இல் மக்கள் சபை உருவானது.

ஆறு மாதங்களின் பின்பு, சர்வரீதியில் அணுகாத, புதிய சட்டத்தை இயற்றுவதற்கான தனது கொள்கையையும் திட்டத்தையும் அறிவித்தது. இது விபரங்கள் இல்லாத, புதியகண்டுபிடிப்பான கரையோரங்களில் வந்து இறங்கிய நூற்றுக்கணக்கான தமிழர்களால் வந்தது. இவர்கள் ஏற்கனவே மேற்கு ஐரோப்பாவில் இருந்தவர்கள். இது அற்பமான தொகையாக இருந்த போதும், "மறைமுகமான இயக்கங்கள்" இடமிருந்து வந்த பிரேரணைகள் கனடாவின் கொள்கை வகுப்பாளர்களை மறைமுகமாக சட்டங்களை அமுல்படுத்தும்படி உணர்த்தியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மே 1987 வரை வரையப்பட்ட மசோதா (சீ - 55) ஜூலை 88இல் மக்கள் சபைக்கு முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. ஓகஸ்ட் 87இல், அடுத்த படகு "சீக்" அகதிகளை கரையிறங்கியதனால், வேறொரு மசோதா ( சீ - 84 ) அறிமுகப்படுத்தப்பட்டு, வந்தவர்களை கப்பல் மூலம் திருப்பி அனுப்பும் அதிகாரத்தையும் - முறைகேடாக கரையிறங்கியவர்களை கண்டுபிடித்து தண்டம் வாங்கும் தன்மையையும் அகதி நடவடிக்கையில் "பாதுகாப்புத்தரவு" களை தவிர்க்கும் முறைகளுடன் 28 நாட்களுக்கு தடுத்து வைக்கும் அதிகாரங்களை அரசாங்கம் கொண்டுஇருந்தது. ஒக்டோபர் 88இல் குடிவரவு அமைச்சர் பாவரா மக்டோகல் கையெடுத்திட்ட புதியசட்டம்1.1.89 இல் வந்தது.

இதன்படி, புதிதாக உருவாக்கப்பட்ட குடிவரவும் தஞ்சமும் சபையின் தஞ்சப்பகுதியில் சுயமாக, "தகுதி" யை நம்பக்கூடிய படைப்புகளை அவன் அல்லது அவள் கொண்டிருக்க வேண்டும். ஏற்கனவே வேறொரு நாட்டினில் அகதியாக கணிக்கப்பட்டு, கடவுச்சீட்டும் (அந்நாட்டு..) வைத்திருத்தல், இல்லாவிடின் அந்நாட்டில் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளார் என்று நம்பக்கூடுமிடத்து விண்ணப்பம் தகுதி அற்றதாகிறது. பாரதூரமான குற்றவாளி கனடாவில் வெகுஜனத்திற்கு ஆபத்தாக இருக்குமிடத்தும் யுத்த குற்றவாளியும் நிராகரிக்கப்படுவார்.

மிகவும் தர்க்கத்திற்குரிய நிபந்தனை என்னவென்றால், "பாதுகாப்பான மூன்றும் மண்டல நாடுகளில் "இருந்து வரும் சனத்தை தவிர்ப்பதே, இந்த மூன்றும் மண்டல நாடுகளை இந்தச் சட்டம் நிச்சயமாக விபரிக்கவோ அல்லது பொருட்படுத்தவோ இல்லை; ஆனால் இந்நாடுகள் 1951 ஐக்கிய சபையின் 33ம் ஷரத்தை (அகதி அந்தஸ்து) இணங்கியுள்ளன.. இது அகதிகளும், தஞ்சம்கோருபவர்களும் சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுமிடத்து உயிர், சுதந்திரம் பாதிக்கப்படுவதை தவிர்க்கிறது.

www.tamilarangam.net

தகுதி காணும் தடையை தாண்டியதும், அதன் உரிமையாளர் "நம்பக்கூடிய பத்திரங்களை" தனக்குரியதுதான் என்பதைக் காட்டவேண்டும். நிருபணம் என்ற தலைவிதி, பிரமாணம் விபரிக்கப்படாமை, என்றவாறு தொடர்ந்து தீர்வு காணுபவர்கள், அந்த விண்ணப்பதாரியின் நாடு பற்றி மனித உரிமை அறிக்கை எவ்வாறுள்ளது என்பதையும் அந்நாட்டுக்காரருக்கு ஏற்கனவே எவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்பதையும் கருத்துக்கு எடுக்கிறார்கள். வேறு எந்தவித விவாதத்திற்கும் இடமில்லை.

விசாரணை ஆரம்பிக்கப்பட்டதும், புதியஅகதி அந்தஸ்த்து நடவடிக்கை இவ்வாறு படிமுறை படுத்தப்படுகிறது:-

முதலில், அகதி நடவடிக்கையில் தீர்வு காணுவதற்கான வழிமுறை வாய்மூலமாக கேட்கப்படுகிறது. இதன்போது அகதி குடிவரவுப்பகுதி அங்கத்தவர்களுடன் மத்தியஸ்தர் பிரசன்னமாயி இருப்பார்.

இரண்டாவதாக, மேற்கூறிய அடையும் வழி ஏற்கப்பட்டால், தீர்மானத்திற்கு வழிமொழியப்படுகிறது.

இருபடிமுறைகளிலும், எதிர்மறையான தீர்ப்புக்கு இணக்கம் தேவை. ஒரு விண்ணப்பதாரி மேற்கூறிய வழிமுறை பிரமாணத்தில் கலந்து கொள்ளவில்லையாயின், கனடாவில் அப்பீல் பண்ண முடியாது; 72 மணி நேரத்திற்குள் வெளியேற்றப்படுவார்.

விண்ணப்பதாரி, அகதிப் பகுதியினரின் விசாரணையில் சித்தி அடைய முடியவில்லை எனின், 'பெடறல் கோர்ட்'டுக்கு 'அப்பீல்' பண்ணுவதற்கு உத்தரவு கேட்டு விண்ணப்பிக்கலாம்.

'பெடரல்'கோர்ட்' இல் இருந்து அப்பீல் தோல்வி அடையும் ஆயின் 'சுப்றீம் கோட்'க்கு பாரப்படுத்தலாம். ஆனல் உத்தரவுடன்! அகதிப்பகுதியினரின் விசாரணையில் சித்தி அடைந்தால், நிரந்தர வதிவுக்காக விண்ணப்பிக்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மசோதா சி – 84, நிபுணர்கள், உதவும் ஸ்தாபனங்கள், தேவாலய அமைப்புக்ள் ஆகியவற்றின் தர்க்கத்திற்கும் கலந்துரையாடல்களை யும் தோற்றுவித்துள்ளது. மக்கள் சபையும் செனட் சபையும் சாட்சிகளை கேட்டுமுள்ளது; ஆனல் இந்த மசோதா அகதி வருகையை தடுப்பதற்காக கொண்டுவரப்பட்டது என்பதே நம்பத்தகுந்தது.

அண்மையில் கனடியன் மனித உரிமை கமிஷனரும் புதிய குடிவரவு அகதிச் சபை தலைவருமான கோர்ட்ன் ஒரு சொற்பொழிவின் போது பதில் தருகையில், இந்தத் திட்டம் தெளிவானதும் மனித உரிமை கலந்தும் உருவாக் கப்பட்டது; சரியான வேளையில் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

“ புதிய திட்டம் தெளிவு, மேன்மை, நற்பயன் என்பவற்றுக்கு திறவு கோலாகிறது. சட்டத்தின்தரம், அங்கத்தவர்களின் தரம், புதிய சபையின் படிப்பும் பயிற்சியும் ஆகிய மூன்றிலும் தான் பரஸ்பரம் அடிப்படைக் கொள் கை தங்கியுள்ளது.” என்றவர் மேலும் தெரிவிக்கையில் “அவை தெளிவாகவும் துரிதமாகவும் புதிய சட்டத்தின்படிபங்கு கொள்கையில் அகதிகளுக்கு தீர்ப்பு சொல்வது மட்டுமே அல்லாது முழுக்க பொருளாதார நோக்குடன் வருபவர் களையும் விவஸ்தை இல்லாத ஏஜென்சிகளையும் தடுத்து நிறுத்தும்” என்றார்.

“ றிபியூஜிஸ் ” டிசெம்பர் 88.

— மொழிபெயர்ப்பு எஸ். வி —

– – – – – – –



“இதென்னமாமியாரும் மருமகளும் வாள் சண்டைக்கு நிற்கிறாங்க? ”
“மகன் தன் இஷ்டப்படி ஜேர்மனி யில் இந்தப் பொண்ணை ஒன்றும் வாங்காமல் கல்யாணம் செய்து கொண்டாராம்; அதுதான் அவங்க நாடு திரும்பியதும் மாமியார் சீதனம் கேட்டு சண்டைக்கு நிற்கிறா”

— சங்கீ —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனம் திறந்து பேசுகிறோம்

எரித்திரியா நாட்டைச் சேர்ந்த நான், இங்கு நடைபெற்ற சர்வதேச பெண்களுக்கான மாநாடு ஒன்றிலே உங்கள் சஞ்சிகையையும், அதனைச் சார்ந்த வர்களையும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் மூலம் சஞ்சிகையில் வெளியாகும் மனம் திறந்து..... என்ற பகுதியைப்பற்றி அறிந்தேன். இப்பகுதி என்னை மிகவும் கவர்ந்தது. இதன் மூலம் நானும் சிலவிஷயங்களை மனம் திறந்து சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு 5 பிள்ளைகள் இருக்கிறார்கள். முதலாவது மகளுக்கு 12 வயது. கடைசி மகளுக்கு 3 $\frac{1}{2}$ வயது. காலை 6.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணிவரை எனக்கு ஓய்வு இல்லாத வேலை. பாடசாலை செல்லும் பிள்ளைகளை தயார்படுத்துவது தொடக்கம், கிண்டர்காரட்னுக்கு கூட்டிச்செல்வது, கடைக்கு க்குப்போவது என்று சகல வேலைகளும் நானே செய்யவேண்டும்.

ஏன் உங்கள் கணவர் எங்கே? அவர் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுவதில்லையா என்று கேட்காதீர்கள், ஏனென்றால் வீட்டிலிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் அவருக்கு நரகவேதனைதான். பிள்ளைகளின் கூச்சல், குழப்படிகள் தாங்கமுடியாது என்று சாட்டுச் சொல்லி எங்கேயாவது கிளம்பி விடுவார். அல்லது விளையாட்டு, நண்பர் வீடு இப்படி ஏதாவது ஒருஇடம் இருக்கும் போய் வருவதற்கு.

நானோ வீட்டை விட்டு வெளியுலகை எட்டிப்பார்ப்பதற்கோ நேரம் கிடைக்காமல் குசினி வேலையுடனும் பிள்ளைகளுடனுமே பொழுதைப் போக்குகிறேன். சிலவேளைகளில் வாய்விட்டுக்கூட உதவிகளைச் செய்து தரும்படி கேட்பதுண்டு. அதெல்லாம் பெண்களின் வேலை, என்னால் முடியாது என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டுப்போய் விடுவார். ஒருநாள் ஓய்வுகிடைக்காதா என்று கூட ஏங்குவதுண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஞ்சாமல் தனி வழியே...

சிறு கிராமம் ஒன்றில் தமது பெற்றோருடன் குமாரன் என்ற சிறுவன் வசித்து வந்தான். அவன் பயம் என்றால் என்ன விலை என்று கேட்பான். அவ்வளவு கட்டிப் பயல்.

ஒருநாள், அவனது வீட்டில் இருந்து தொலைவு தூரத்தில் உள்ள தனது பாட்டியின் வீட்டிற்கு போக எண்ணினான். அவனது பெற்றோர் சம்மதிக்காததால் தன் விருப்பப்படி தனியாக போவது என்று தீர்மானித்து விட்டான்.

குமாரன் அந்த அடர்ந்த காட்டுப் பாதையின் ஊடாக ஓட்டமும் நடையுமாக விரைந்தான். பொழுது சாய்வதற்குள் பாட்டி வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற அவசரம் அவனுக்கு.

இந்த அடர்ந்த காட்டின் ஊடாக தனிவழி போகிறோமே என்ற அச்சம் இருக்கவில்லை. ஒற்றையடிப் பாதையின் ஓரங்களில் நிற்கும் மரங்களில் இருந்து கனிகளைப் பறித்து ருசிபார்த்துக் கொண்டே போனான். ஆனால் இடை தூரத்தில் களைப்பு மிகுதியால் பெரியஆலமரத்தின் நிழலில் சாய்ந்து கொண்டான். சற்று நேரத்தில் சோர்வு காரணமாக நித்திரை தன்னை அறியாமல் ஆட்கொண்டது.

தற்செயலாக அவனது கை மரத்தின் கிளையில் தொங்கிக் கொண்டிருந்த நாகத்தின் தலையில் விழுந்தது. நாகம் சீறி எழுந்து, அவனது கையை தீண்டுவதற்காக குறிபார்த்தது. இந்நேரத்தில் அவனையும் அறியாமல் பின் தொடர்ந்து வந்த அவனது செல்லப் பிராணி கீரிப்பிள்ளை நாகத்தின் சீறலைக் கேட்டது. கணப் பொழுதில் நாகத்தின் தலையைக் குறி பார்த்து கீரி பாய்ந்தது.

திடுக்கிட்டு எழுந்த குமாரன், தனது செல்லப் பிராணி பாம்புடன் சண்டையிடுவதைக் கண்டான். அதிஷ்டவசமாக தான் காப்பாற்றப்பட்டதை நினைத்துப் பார்த்தான். பாம்பு தன்னைத் தீண்டியிருந்தால், யார்? தன்னைக் காப்பாற்றி இருப்பார்கள் என்பதனை அவன் உணர்ந்து, இனிமேல் சிறுவனாகிய தான் தனியாக தொலைவு இடங்களுக்கு செல்வது இல்லை என்று தீர்மானித்தான். பாம்புடன் சண்டையிட்டு வென்ற தனது செல்லப் பிராணி கீரிப்பிள்ளையை தூக்கி அணைத்துக் கொண்டு தனது வீடு திரும்பினான்.

— சசிதரன் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனிப் பூக்கள்

மலர் மலராய் கொட்டுதடி மல்லிகையும் அல்ல!
பூப்பூவாய் உதிருதடி நிறம்மாறும் பூவுமல்ல!
கனிமலர்கள் போலவே ஆடி ஆடி!
விண்மீன்கள் எனவே விழுந்தடி என் தலையில்!!

பனிநீர்த் துளியென குளிருதடி முகமெல்லாம்!
கண்ணீர் சொட்டவே துடைக்கிறேன் என் விழியை!
மண்ணில் வீழ்ந்த பின்னர் காட்டாறும் ஓடுதடி!
எண்ணி எண்ணிப் பார்க்கின்றேன் பூரிப்பும் அடைகின்றேன்!!

பொம்மைகள் பல செய்திடுவோம் படுத்திருந்து உருளுவோம்!
அம்மாவும் நாமும் சேர்ந்தே ஆடிடுவோம்!
பந்துகள் செய்து எறிந்திடுவோம் பலர் மேலே!
பந்துக்கள் வந்தால் பசியும் பறந்திடுமே!!

நாள் முழுக்க நின்றிடுவோம் நாழிகை போவது தெரியாமல்!
புல்லின்மேல் நடப்பதுபோல் தாவித்தாவி ஓடிடுவோம்!
பள்ளிக்கூடம் விட்டதும்மே அள்ளிடுவோம் கைநிறைய!
பிள்ளைகள் பலர் கூடியே ஆடிடுவோம் கவிபாடிடுவோம்!!

— சசி கோபால் —
" நொயன் றேட "

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


எந்த நாட்டுப் பெண்ணாக இருந்தாலும் அவர்களுக்கு என்று சிலகடமைகளை சமூகம் சுமத்தி விடுகிறது. இதலிருந்து மீள்வது எப்போது என்ற கேள்வி எனக்குள் எழுகிறது. உங்களுக்கும் அப்படித்தானா?

— ஜெனிபர் —

( ..... அதைவிட நன்று )

இதே தொழிலை ஊரில் படித்த இளைஞர்கள் மேற்கொண்டால், நாடு எவ்வளவோ தன்னிறைவு பெற்றிருக்கும். ஆனால் அவனது இக்கட்டான நிலைமையை உணர்கிறாள். என்னும் கொம்பியூட்டர் ஸ்பெசலிஸ்ட் என்று சொல்லித்தானே அவனது பெற்றோர்கள் சீதனம் வாங்கினார்கள். செய்யும் தொழிலே தெய்வம் என்பதனை மனதில் நினைத்து கொண்டவள்; எப்படியாவது வாங்கிய சீதனத்தை, அவனிடம் இருந்து மீளப் பெற்று, தனது பெற்றோருக்கு வங்கி மூலமாக அனுப்ப வேண்டுமென்ற உறுதியுடன் காரை விட்டு இறங்கினாள் புதிய வாழ்க்கை வாழப் போகும் வீட்டின் முன்பாக.

( கற்பனை )

## தூங்கும் நேரம் எது?

பல்வேறு நாட்டு மக்களின் தூங்கும் பழக்கம் பற்றி மேற்கு ஜெர்மனி பல்கலைக்கழகம் ஆராய்ச்சி நடத்தி, சில சுவையான தகவல்களை வெளியிட்டு உள்ளது.

மயன் இன மக்கள் அதிகாலை 3 மணிக்கு தூங்கி விழிக்கிறார்கள். விழித்ததும் வேலைக்கு செல்கிறார்கள்.

யாகன் இனத்தவர், தூங்குவதற்கு குறிப்பிட்ட நேரம் வைத்துக்கொள்வது இல்லை. தூக்கம் வரும்போது தூங்குகிறார்கள். விழித்ததும் வேலைக்கு செல்கிறார்கள்.

இந்தியா போன்ற ஆசிய நாட்டினர் பஸ், ரெயில் போன்ற வாகனங்களில் பயணம் செய்யும்போது கூட தூங்குகிறார்கள். ஆனால் மேற்கிந்திய நாட்டினர் இப்படி ஆடிக்கொண்டு இருக்கும் வாகனங்களில் தூங்குவது இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர் களஞ்சியம்



சர்வதேச சிறுவர் குழு

அன்பான சிறுவர், சிறுமிகளே!

21.1.89 தொடக்கம் மூன்றாம் உலக நாடுகளின் தகவல் நிலையம் Overweg Str. - 31 இல் ஜேர்மன், வெளிநாட்டுப் பிள்ளைகள் பங்குபற்றும் சிறுவர் குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன், இலங்கை, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்த பிள்ளைகள் இதில் பங்குபற்றி வருகிறார்கள். நீங்கள் ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொள்ளவும், நட்புடன் பழகவும் இந்த அமைப்பு உங்களுக்கு உதவுகிறது.

பாடல், நடனம், கதை வாசித்தல், சமையல், கைவேலைகள், விளையாட்டுக்கள் என்பன இதில் இடம் பெறுகின்றன. உண்மையில் உங்களுக்கு வேடிக்கையையும் மகிழ்ச்சியையும் தரக்கூடியது.


| | |
|---|---|
| திங்கட்கிழமை | 15.00 மணி - 18.00 மணி |
| சனிக்கிழமை | 10.00 மணி -- 14.00 மணி |

இடம் பெறும் இச்சிறுவர் குழுவில் நீங்களும் பங்குபற்ற விரும்பினால் செல்வி. Ute Winkler, Overweg Str. 31, 4690 Herne இந்த விலாசம் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கர்ப்பத்தடை மாத்திரையால் புதிய ஆபத்து!

**கர்ப்பத்தடை மாத்திரைகளுக்கும் மார்பகப்புற்று நோய்க்கும் தொடர்பு உண்டா? இது பற்றிய ஆராய்ச்சியின் பின்னர் வெளியான அறிக்கை ஏற்படுத்திய கலக்கமும் குழப்பமும்.**

1960ம் ஆண்டு கர்ப்பத்தடை மாத்திரைகள் அறிமுகப்படுத்தப் பட்டபொழுது அவற்றை ஒரு சுலபமான, நம்பிக்கையும் பாதுகாப்பையும் கொண்ட முறையெனவே பெண்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் 1970ம் ஆண்டில் வெளியான ஆராய்ச்சி முடிவுகள் மாத்திரை பாவிக்கும் பெண்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியது. புகைத்தல் பழக்கமுடைய பெண்கள் இம்மாத்திரைகளைப் பாவிப்பதனால் புகைத்தல் பழக்கமில்லாத பெண்களிலும் பார்க்க மாரடைப்பினால் பாதிக்கப்படும் அபாயத்தை அதிக அளவு கொண்டுள்ளார்கள் என்னும் உண்மையே மேற்படி ஆராய்ச்சியின் முடிவாகும் மேலும் 1980ம் ஆண்டின் பின்னர் இம்மாத்திரைகள் மீண்டும் பிரபல்யமடைந்தன. காரணம், இவை சூலகத்திலும், கருப்பையிலும் புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கின்றது. என்னும் கண்டுபிடிப்பேயாகும்.

தற்போது பெண்கள் மீண்டும் கலக்கமும் குழப்பமும் அடைந்திருக்கின்றார்கள். இம்முறை கருத்தடை மாத்திரைகள் பாவனை மார்பகப்புற்று நோயைக் கொடுக்கலாம் என்னும் அபாய அறிக்கையேயாகும். அண்மையில் அமெரிக்காவில் இதுபற்றிப் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 13.2 மில்லியன் பெண்களிடம் (மாத்திரை உட்கொள்பவர்கள்) இருந்து வைத்தியர்களுக்குத் தொலைபேசி அழைப்புக்கள் விளக்கங்கள் கேட்டு வந்தனவாம். இது ஆச்சரியப்பட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வேண்டிய விடயமல்ல. ஏனெனில் அமெரிக்காவில் வருடமொன்றிக்கு 42,000 பெண்கள் மார்பகப்புற்று நோயால் இறக்கின்றார்களாம். அத்துடன் பெண்கள் இறப்புக்குக்குரிய காரணங்களில் இந்நோய் 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளில் அடங்குவன சில:-

1. 13 வயதுக்கு முன்னரே பருவமடைந்த பெண்கள் பிள்ளைகள் இல்லாதவர்களாயும் கருத்தடை மாத்திரைகளை 8 தொடக்கம் 11 வருடங்கள் பாவிப்பவர்களாயும் இருந்திருந்தால், இவர்கள் மாத்திரை மாத்திரை பாவிக்காத பெண்களிலும் பார்க்க மார்பகப்புற்று நோயினால் தாக்கப்படும் சாத்தியத்தை மும்மடங்கு அதிகமாகக் கொண்டுள்ளார்கள்.

2. 10 வருடங்கள் கருத்தடை மாத்திரைகள் உட்கொண்ட பெண்கள் தங்கள் 45ஆவது வயதில் இவ்வகைப் புற்றுநோயால் தாக்கப்படும் அபாயத்தை 3மடங்கு அதிகமாகக் கொண்டுள்ளார்கள். இது மாத்திரை பாவிக்காத பெண்கள் இந்நோயினால் தாக்கப்படும் சாத்தியத்திலும் பார்க்க 3 மடங்கால் கூடியதாகும்.

3. 30 - 34 வயதுப் பெண்களில் (முன்னர் மாத்திரைகள்பாவித்தவர்கள்) மார்பகப்புற்று நோய் பரவும் விகிதம் மாத்திரை பாவிக்காத பெண்களிலும் பார்க்க 3 மடங்கு அதிகமாகும்.

தீர்வு ஏதும் எடுக்கப்படாத இவ்வாராய்ச்சிகள் இன்னும் முற்றுப் பெறவில்லை. மாத்திரைகள் பாதுகாப்பானவை என்று கூறும் சுமார் 30 ஆய்வுகளில் இவ்வாராய்ச்சி மாறுபட்டுள்ளது. 'உணவு, மருந்து நிர்வாகம்' பற்றிய ஆலோசனைக்குழு ஒன்று இதுபற்றிச் சில ஆய்வுகளை ஆராய்ந்த போது, மாத்திரை பாவனையை எச்சரிக்கக்கூடிய அளவுக்குச் சான்றுகள் வலிமையானதாக இல்லையென முடிவெடுத்தார்கள். ஆனால் இவ்விடயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்வெடுக்கப்படாதவொன்றுவும் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்கள்.

சில மாத்திரை பாவனையாளர்கள் மாத்திரை பாவனையால் பாது காப்பு கேள்விக்குறியில் உள்ளதெனப் பெண்கள் எச்சரிக்கை செய்யப்பட வேண்டுமென வாதிட்டார்கள். மாத்திரை பாவனைக்கும் மார்பகப் புற்று நோயுக்கும் தொடர்பு இல்லையென்பதை கூறமுடியாமல் இருக்கின்றதாம்.

டைம் – ஜனவரி 16-1989.
மொழிபெயர்ப்பு– 'ஹெரன்"

---------------




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நால்வகைக் குணங்கள் நங்கைக்கு அவசியமா?

(சென்ற இதழ்தொடர்ச்சி)

— விக்கு பாக்கியநாதன் —

அந்த இடத்தில் அவள் நாணத்தை அக்காதலன் ரசிக்கின்றான். ஆனால் இந்தநாணத்தை நீதிமன்றத்தில் காட்டமுடியுமா? சிந்தனையை புரட்டிவிட்டுப் பாருங்கள்.

இன்று பல எம்மினப்பெண்கள், நமது தாய்நாட்டைவிட்டு இங்கு பறந்து வந்துவிட்டோம் சில பெண்கள் தமது கணவர்களுடன் பாதுகாப்பாக வந்து சேர்ந்துவிட்டார்கள். வந்து கொண்டும் இருக்கிறார்கள். இவர்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று வீட்டுக்குள் இருக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டவர்களாயிருந்தால் இங்கு வெளிநாடென்று வந்திருக்கவே முடியாது. எத்தனையோ கன்னிப்பெண்கள் எமது தமிழ்மகனையே, அவன் அந்நிய ஆடவனாக இருந்தாலும் சகோதரனாக மதித்து அவனிடம் உதவிகள் பெற்று, சில வேளைகளில் ஒரே இருக்கையில் அமர்ந்து விமானமேறி, புகையிரதமேறி வெளிநாடு வருகின்றார்கள். அத்தகைய ஆண்களும் தம்மினச்சகோதரியென்று தாராளமாக உதவி செய்திருக்கின்றார்கள், இவ்விடத்தில் அவள் பயிர்ப்பு என்றும், அது எமது பண்பு என்றும் ஒதுங்கிவிடமுடியுமா? ஒதுங்கிவிட்டால் திரும்ப வீட்டிற்கே போகவேண்டும். இங்கு பெண்கள் நால்வகைப்பண்புகள் உள்ளவர்களாக இருந்திருந்தால் ஒரு போதும் வீடு தாண்டி, நாடு தாண்டி வேற்றுநாடுகளுக்கு வந்திருக்கவே முடியாது. அப்படியென்றால் அவர்கள் அக்குணங்கள் அற்றவர்களா?

இல்லவேயில்லை. தேவையான போதுதான் அந்த நால்வகை அம்புகளையும் பிரயோகிக்க வேண்டும். இதுவேஉண்மை. உதாரணமாக ஒரு காமுகன் முன்னே இப்பண்புகளுடன் போக முடியுமா? இங்கே அவை உடைத்தெறியப்பட்டு கண்ணகி போல் மாற வேண்டும். இது இயற்கையாகவே அமையுமொன்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு நீங்கி ஆண்களுக்குச்சமமாக நின்று ஆண்
களின் திறமையை தானும் பெற்றது போலவே நின்று வாதாடி வெற்றியும் காண்
கின்றாள். இங்கே இந்த நால் வகைப்பண்பையும் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தால்
அந்தப் பெண்வழக்கறிஞரின்நிலை, நீதி வழங்குபவரும் நால்வகைக் குணங்கொண்ட
ஒருபெண்ணாக இருந்தால் அந்நீதியின் முடிவுகள் எப்படியிருக்கும்? உங்கள்
சிந்தனையோட்டத்தை சுழலவிடுங்கள்.

மேற்கூறிய வைத்தியர், வழக்கறிஞர், நீதி
வழங்குபவர் மூவரும் பெண்களாக இருக்கின்றார்கள். இவர்கள் தமது அன்புக்
கணவர் முன்னே காதலிவலையிலே, இல்லறஇன்பத்திலே இந்த நாற்பண்பும் கொ
ண்ட குலமாதராக மாறி குடும்பம் சிறக்க வைப்பர் என்பதில் ஐயமேயில்லை.
கணவன்முன்னே மனைவி வழக்கறிஞராக கதைகளை விவாதித்துக் கொண்டிருந்தால்,
வைத்தியர் தனது சேவையையே பேசிக்கொண்டிருந்தால் வீடு, நீதிமன்றமாகவும்,
வைத்தியசாலையாகவும் போய்விடும். எனவே அங்கே பெண்ணானவள் தனது
அதிகாரங்கள், பதவிகள் யாவற்றையும் இழந்து அன்புக்கணவன் முன்வே பத்தாவு
க்கேற்ற பதிவிரதையாகி விடுகின்றாள். இது தான் உண்மை ஒரு பெண் தன்னையும்
காத்து தன்கணவனையும்காத்து கற்புநெறியில்நின்று சற்றேனும் விலகாது மாதர்
குல மாணிக்கமாகத் திகழ்ந்தால் அங்கே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு யாவு
ம் வலுவின்றிப் பதுங்கிவிடுகின்றனவே, இதேபோற்தான் வக்கிலாகக் கர்ச்சித்த
இளமங்கை தன் காதலனையோ, அன்றிக்கணவனையோ கண்டதும் நாணிக்கோணி
அடக்கத்துடன் ஒன்றுமறியாத சிறு பெண்ணின்நிலை போன்றவள் ஆகின்றாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பெண்களின் நால்வகைக் குணங்கள் என்பது பழைய கட்டுப்பாடுகளில் ஒன்று. அவையின்று வெளிப்படையாக இருக்க வேண்டுமென்பதில்லை. தேவையான போது அவை கடைப்பிடிக்க வேண்டியதொன்று. எழுச்சிப்பெண் தன்னிலையிலிருந்தும் வழுவாமல் கற்பெனும் திண்மை உண்டாகப் பெற்றபின் அவளிடத்தில் நால் வகைக்குணங்கள் தோற்றுவிடுகின்றன. மேலும் காலமறிந்து, கருத்தறிந்து, சூழலறிந்து நால்வகைக் குணங்களைப் பிரயோகிக்கும் சந்தர்ப்பம் ஒரு பெண்ணுக்கே புரியும். அடக்கும் நோக்குடைய ஆண்களுக்கு எடுத்துச் சொன்னாலும் புரிய நியாயமில்லை. அதைஏற்கும் தகுதியில் அவர்கள் இல்லை. இதுவே இன்றைய காலகட்டத்தில், பாரதி நூற்றாண்டின் இறுதிக்கால முடிவுகள் எனக்கூறின் பொருத்தம் உடையதாகும்.

00000000000000000000000000000

## காதை செவிடாக்கும் காற்று ஆலை!

மேற்கு ஜெர்மனியில் உள்ள ஹால்ஸ்டன் மாநிலத்தில் ராட்சத காற்றாலை ஒன்று 7 ஆண்டுகளுக்குமுன் அமைக்கப்பட்டது. இதில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தை நூற்றுக்கணக்கான வீடுகள் பயன்படுத்தி வந்தன.

சரியான பராமரிப்பு இல்லாததால் இந்த காற்று ஆலை பழுதடைந்துவிட்டது. இப்போது இதை பழுது பார்க்க மட்டும் ரூ. 9 கோடி தேவைப்படுகிறது.

9 கோடி ரூபாய் செலவிட்டு பழுது பார்ப்பதைவிட அதை இடித்து தரைமட்டமாக்கிவிடுவது என்ற முடிவுக்கு அதிகாரிகள் வந்துள்ளனர்.

150 மீட்டர் உயரமுள்ள இந்த காற்று ஆலையின் இரைச்சல் சத்தம் காதை செவிடாக்குவதாகவும், அதன் விசிறிகளில் சிக்கி ஏராளமான பறவைகள் செத்து விழுவதாகவும் புகார் கூறப்பட்டு உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

WEST GERMAN UNIVERSITY TAMIL STUDENTS SERVICE • W·GUTSS •

# மேற்கு ஜேர்மன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் பேரவை

உ

இச்சேவை மனித மேம்பாட்டுக் கல்வியே இன்றியமையாததென்ற பெருநோக்கிலே, இன்றைய தமிழ்ச்சமுதாயம் கல்வியிலே பின் தள்ளப்பட்டுள்ளதையுணர்ந்து மேற்கு–ஜேர்மனி பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. முத்தாம்ப்பாக இலங்கை மாணவர்கள் ஜேர்மன் பல்கலைக்கழகங்களில் எவ்வாறு உயர்கல்வியைத் தொடரலாம் என்பதனை மிக விபரமாக அவர்களுக்கு வழங்கி வருகிறது. அதன்படி, தகவல்களை அறிய எம்முடன் தபால் மூலம் தொடர்புகொள்ளலாம்.

இச்சேவைக்கு உதவிசெய்ய விரும்பும் ஜேர்மனி வாழ் தமிழ்மக்கள் எமக்குத் தேவைப்படும் ஜேர்மன் நாட்டு தபால்தலைகளை அனுப்பிவைத்து எமது நோக்கிற்கு உதவி செய்யலாம். நாங்கள் வெகுவிரைவில் வெளியிட இருக்கும் இரண்டாவது வழிகாட்டிக் கையேட்டை இலவசமாகப் பெற்றுக் கொள்ள எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

*"Art is long and life is Short"*

தொடர்பு முகவரி:–

WEST GERMAN UNIVERSITY
TAMIL STUDENTS SERVICE,
Nd. RAMSTAEDTER ST. 179A/2,
6100 DARMSTADT,
WEST GERMANY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் மக்களை கலங்க வைக்கும் குடியேற்றத் திட்டங்கள்!

இலங்கையின் இனப் பிரச்சினையின் போக்கையே தன்மைக்கு திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் தமது பாரிய பங்களிப்பைச் செய்துள்ளன. சம்பவங்களை இங்கே தெளிவாகக் காட்டிக் காட்டியுள்ளது. இவ் வண்ணம் பலம் அடிப்படையாகும் உருவாகப்பட்ட போதும் திட்டமிடப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் கைவிடப்பட்டதாக இல்லை. அவை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## மகாவலி ஆறு

இன்று வரையாகும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது மகாவலி ஆற்றுக் குடியேற்றத் திட்டமாகும். அதுகாலே பல்வேறு குடியேற்றத் திட்டங்களிலும் கலந்துள்ள தமிழ் மக்கள் இத் திட்டத்தின் மூலம் மேலும் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். இப் பகுதிகளில் பாரம்பரியமாகப் பெரும் பான்மையினர் காலங்களின் வாழ்க்கையைக் கேள்விக் குறியாக்கி உள்ளது. தமிழ் மக்கள் முன்னைய நிலையைப் போராடிக் கைவிட இன்மைப் போன்ற வைக்கும் வகையில் விடுவதாகவும் அமைந்துள்ளது.

## மக்களின் நிலைப்பாடு

திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் பற்றி தமிழ், முஸ்லிம் மக்கள் திட்டவட்டமாகத் தமது கருத்தைத் தெரிவித்துள்ளனர். தமிழர் சார்பு இயக்கங்களும் தமது நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தியுள்ளன. ...ஒப்பந்தங்களில் குடியேற்றத் திட்டங்கள் பற்றி தமிழ் மக்களின் நிலைப்பாடு தெளிவாக நடைமுறைப்படுத்தப்படாமல் போகும் போதும் திட்டமிடப்பட்ட குடியேற்றம் முக்கிய விடயமாக அமைந்தது. ஆனால் நடைமுறையில் இவை அமைந்தது முரண்பாடான நிலையிலேயே. இன்று பல தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும். அதுவே பெரும் அச்சுறுத்தலாக மகாவலி ஆற்றுக் குடியேற்றத் திட்டம் அமைந்துள்ளது.

## பயனற்ற ஒப்பந்தங்கள்

இலங்கை வரலாற்றில் ஒப்பந்தங்கள் ஏற்படுவதும் பின் நடைமுறையில் அதற்கு மாறாகக் காரியங்கள் நடைபெறுவதும் வழமையாகிப்போன நிகழ்ச்சிகளாகும்.

## பண்டா – செல்வா ஒப்பந்தம்

1957 ஆம் ஆண்டு பண்டா — செல்வநாயகம் உடன்படிக்கை ஏற்பட்டது. இவ் உடன்படிக்கை மூலம் குடியேற்றங்களை இனிமேல் மேற்கொள்வதில்லையென ஒத்துக் கொள்ளப் பட்டது. ஆனால் இவ் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதிலும் உடன்படிக்கை செல்லாததாகியது; எனினும் குடியேற்றத் திட்டத்தில் தமிழ் மக்களின் நிலைப்பாடு தெளிவு படுத்தப்பட்டிருந்தது. இவை புறக்கணிக்கப் பட்டன. மீண்டும் குடியேற்றத் திட்டங்களை அரசு ஏற்படுத்தியது:

## டட்லி–செல்வா ஒப்பந்தம்

இதேபோல் 1965 இல் மேற்கொள்ளப்பட்ட டட்லி — செல்வா ஒப்பந்தத்திலும் குடியேற்றம் பற்றிய தமிழ் மக்களின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டிருந்த போதும் பழைய காப்பான அனுபவங்களே கிடைத்தன.

## இந்திய–இலங்கை ஒப்பந்தம்

இந்த கசப்பான அனுபவங்களின் பின் இந்திய – இலங்கை ஒப்பந்தம் உடன்படிக்கையின் பின்பும் தொடர்கின்றதென மீண்டும் தமிழ் மக்கள் காட்டுகின்றனர். அவ்வகையில் 1957, 1965 ஆம் ஆண்டுகளில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஏற்பட்ட கதிதான் இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தத்திற்கும் ஏற்பட்டு விட்டதோ என்ற தமிழ் மக்கள் அச்சுவதில் நியாயமிருக்கின்றது.


## வர்த்தமானி அறிவிப்பு

மகாவலி ஆற்று குடியேற்றத் திட்டம் மகாவலி "எல்" வலயமென்ற பிரகடனத்துடன் 1988 ஏப்ரல் மாத 15 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது: இப் பிரதேசத்திற்குள் 75 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பு அடங்கியுள்ளதாகவும், இந்நிலப் பரப்பில் 43 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 6000 குடும்பத்தினர் உள்ளதாகவும் சுரோஸ் தனது அறிக்கையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடகிழக்கில் குடியேற்றங்கள்-




காட்டிக்காட்டியுள்ளது. இப் பகுதிகளில் ஏற்கனவே பெரும்பான்மை இனத்தவர்களைக் கொண்டு வந்து குடியேற்றும் வேலைகள் தொடங்கிவிட்டன. இந்திய — இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் பின்பே மணல் ஆற்று குடியேற்ற திட்டத்தில் அரச கவனம் செலுத்தியுள்ளது: இதன் மூலம் சமாதான ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறியுள்ளது என்பதே தமிழர் தரப்பினரின் குற்றச்சாட்டாகும்.

மேற்படி திட்டம் மகாவலி திட்டத்தின் கீழ் வருவதாகவும் ஏற்கனவே திட்டமிட்டவாறு நாம் செயற்படுகின்றோம் என அரச தரப்பில் கூறப்படுகின்றது. ஆனால் மகாவலித் திட்டத்தின் பல தொடக்க வேலைகளோ இன்னும் முடிக்கப்படவில்லை. வடக்குக்கு நீரைக் கொண்டு வரவேண்டிய எல்.பி. கால்வாய் இன்னமும் அமைக்கப்படவில்லை. அத்துடன் "ஜ"க்கும் "எல்" திட்டமான மணல் ஆற்றுத் திட்டத்துக்கும் இடைப்பட்ட பல திட்டங்கள் இன்னும் தொடங்கப்படவில்லை. இவ்வாறுள்ள நிலையில் "எல்" திட்டத்தை அவசர அவசரமாக நிறைவேற்ற வேண்டிய அவசியமென்ன எனவும் தமிழர் தரப்பினர் கேட்கின்றனர்.

மகாவலி திட்டத்தின் கீழ் வரும் பி.சி. என்ற இரு திட்டங்கள் மூலம் மட்டக்களப்பு மாவட்டம் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. "எல்" திட்டமான "மணல் ஆற்று" குடியேற்றத் திட்டமும் வடக்கு, கிழக்கு இணைப்பிற்கும் பாதகமாக உள்ளது.

அத்துடன் பாரம்பரியமாக இப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் நிலத்தில் பெரும்பான்மை இனத்தவர்களை குடியேற்றுவதன் மூலம் இந்திய — இலங்கை உடன்படிக்கையின் பின்பும் தமிழ் மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது சொந்த மண்ணில் இருந்து விரட்டப்படுவதே தொடர்கின்றது என்பதையும் இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வடக்கு, கிழக்கில் ஏற்படும் குடியேற்றங்கள் பொருளாதார அபிவிருத்தியை மையமாகக் கொண்டதே எனக் கூறப்படுகின்றது. இப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கு நடைமுறையில் உள்ள குடியேற்றத் திட்ட வசதிகளை அளிப்பதன் மூலமும் அரசு எதிர்பார்க்கின்ற பொருளாதார அபிவிருத்தியை எட்டலாம். இதற்கு அங்கு வாழும் மக்களை அகதிகளாக்கத் தேவையில்லை என்பதும் தமிழ் மக்களின் நியாய பூர்வமான கோரிக்கையாகும்.

## பொருளாதார அபிவிருத்தி

இப்படிப்பட்ட குடியேற்றங்களின் தந்தை டி.எஸ். சேனநாயக்க ஆவார். விவசாய, பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதே இத் திட்டங்களின் நோக்கம் என்று கூறியே அவர் இத் திட்டங்களைச் செயற்படுத்தினார். ஆனால் நடைமுறையில் இது பெரும் தோல்வியைத் தழுவியதைக் கண்டோம். பெரேரா அன்று அரசாங்க சபையில் சுட்டிக்காட்டினார். பொருளாதார அபிவிருத்தி என்ற போர்வையில் தொகையான பணத்தை விரயப்படுத்துவதை விட, இதற்கு சமூக நலத்திட்டமென்ற பெயர் சூட்டுவதுதான் பொருத்தம் என்றும் சுட்டிக்காட்டினார். ஆனால் இக் குடியேற்றங்களின் நோக்கம் வேறாக இருந்ததினால் அது இதுவரை தொடர்ந்து கொண்டு இருக்கின்றது.

இன விகிதாசாரத்திற்கேற்ப குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பொருளாதார அபிவிருத்தியுடன் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கு முகமாகவே குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன எனக் கூறப்பட்ட போதும் இவை எல்லாவற்றிலும் பெரும்பான்மையினருக்குச் சாதகமாக இருக்கின்றன. மகாவலித் [illegible] இடம் பெறும் குடியேற்றங்களில் தமிழர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. வடக்கு கிழக்கில் ஏற்படும் குடியேற்றங்களிலும் தமிழர்கள் இடம் பெறுவதில்லை. மொத்தத்தில் பெரும்பான்மையினருக்குச் சாதகமாகவே இக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என்பது வெளிப்படையான உண்மையாகும்.

[illegible] கூறுவதானால் இஸ்ரேல் தான் கைப் பற்றிய பலஸ்தீன மண்ணில் மேற்கொண்டுள்ள குடியேற்றங்களை முன்மாதிரியாகக் கொண்டே இங்கும் குடியேற்றங்கள் நடைபெறுவதாகக் கொள்ளப்படுகின்றது. அப்படியானால் எமது நாடு சுதந்திரத்தின் பின்பும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் ஆளும் வர்க்கம் சிறுபான்மையினரை [illegible] கொள்கை தொடர்ந்து கொண்டு தான் இருக்குமா என்பதே தமிழர்கள் முன் வைக்கும் கேள்வியாகும்.

**வி. தேவராஜ்**

வீரகேசரி. 21.12.88.

பணத்தைவிட அறிவு சிறந்தது. ஏனெனில் பணத்தை நீ பாதுகாக்க வேண்டும். ஆனால், அறிவு உனக்குப் பாதுகாப்பு அளிக்கும்.
—பழமொழி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதைவிட நன்றா!

- கௌதமன் -

சாலையின் இரு ஓரங்களிலும் சவுக்கு இன மரங்கள் வேகமாக பின் நோக்கி ஓடுகின்றன. மரத்தின் கிளைகளில் தொங்கி நிற்கும் பனித்துண்டுகள், அந்த வஸுந்தரத்தில் பளிச்சென்ற ஒருவகை வெளிச்சத்தை உண்டாக்கி, பார்ப்பவர் மனதிற்கு உற்சாகத்தை உண்டாக்குகிறது.

நமது ஊர் திருவிழாவில் 'மேக்குறி பல்பு' கள் பூட்டி சோடித்திருப்பது போன்ற பிரேமையே அந்த உற்சாகத்திற்குக் காரணம். விமலா, மெதுவாக எட்டி காரின் வேகத்தை மீற்றரில் நோட்டமிடுகிறாள். அப்பாடா, நூற்றியறுபது கிலோமீற்றர் வேகம்!... நமது ஊர் நெடுஞ்சாலைகளில் இவ்வாறு ஓட முடியுமா?... கார் 'பீஸ் பீஸ்' தான்!

விமலா ஜெர்மனிக்கு முதன் முதலாக நேற்றுத்தான் காலடி வைத்தாள். " பிராங்போர்ட் காம்ப் ' லேயே தாய்நாட்டின் மகிமையை உணர்ந்தாள். அவள் பேராதனை வளாகத்தின் பட்டதாரி. கொழும்பில் வேலைபார்த்தவள்.

கொழும்பு விமான நிலையத்தில் பெற்றோரிடமும் சகோதரிகளிடமும் விடைபெற்று வரும்போது பெரும் எதிர்பார்ப்புடனும்,, எண்ணத்துடனும்தான் இருந்தாள். இங்கு வந்து இறங்கியதும் விசாரணை, அகதி ... என்றவாறாக தன்மானத்தை இன்னொரு நாட்டவர் ஏளனப்படுத்துவது போல் நடந்த இந்தத் தடிப்புகள்,, நெஞ்சின் முள்ளாய் குத்தின. வெளிநாட்டு வித்தியாசமான வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்ற கொழும்புக்கும் பிராங்போர்ட்டுக்கும் இடையேயான் அற்புத மனக்கோட்டையின் முகப்பு அந்த இடத்தில் நொறுக்கப்பட்டது.

விடிந்ததும் தனக்கு மாப்பிள்ளையாக ஊரில் சம்பந்தம் பேசி தீர்த்த முகுந்தன் ' காம்ப் " க்கு வந்து அவரது இடத்துக்கு கூட்டிச் செல்கிறான். இருவருக்கிடையிலும் பேச்சுக் குறைவு. அவனுக்கு ஒருவகை கூச்சமா? அல்லது அவளுக்கு வெட்கமா?... அவளுக்கு இல்லை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவளது பரிதாபகரமான, ஏமாற்றமடைந்த சாயலைக் காட்டும் முகத்தைப் பார்த்ததுமே முகுந்தன் கூனிவிட்டான். காரியாலயத்தில் அவளுக்குப் பக்கத்தில்தான் அவன் இருக்கிறான். ஆனால் ஒருவகை அச்சம் அவனைப் பேச விடாமல் தடுக்கிறது.

"இங்க, என்ன வேலை பார்க்கிறீங்க?..." பனிக்கட்டி கசிந்து நீர் வடிவது போல் விமலாவிடம் இருந்து வார்த்தைகள் உதிர்கின்றன.

"சும்மா... தோட்ட வேலைதான்...!" முகுந்தனின் ஒவ்வொன்றாக வந்த வார்த்தைகளைக் கேட்டதும் திடுக்கிட்டாள் விமலா.

"ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை, இங்க நம்மட ஆக்கள் எல்லாரும் இப்படியான வேலைதான்..." என்றவாறு சோஷலிசம் பேச முற்பட்டான் அவன்.

அவனும் ஒரு பட்டதாரியாக இருந்தும் ஏன் இந்த கூலிவேலை செய்கிறான் என்ற புதிர் அவளைக் குடைந்து கொண்டிருந்தது. அது சோஷலிஸம் என்று இருந்திருந்தால், ஏன் தன்னைக் கட்டிக்கொள்ள சீதன ஆதனம் வாங்கினார்கள். எதிர்கால வாழ்வின் கனவுகளை நனவாக்காமல் மரணமடையும் தியாகிகள் இருக்கும் இந்த சமுதாயத்தில் இந்தக் கூட்டமும் வளர்ந்து வருவதை நினைத்து அச்சப்படுகிறாள்.

வாழையடிவாழையாக தொடரும் சீதனமுறையை சில அற்புதமான இளைஞர்கள் வெறுத்தாலும் அவர்களைப் பெற்றோர்கள் விடுவார்களா? அவர்களேதான் அங்கு வாங்கிக் கொண்டார்கள், இவனைப் பார்த்தால் அப்படி புரியவில்லை.

"இந்நாட்டுப்பாடு நன்றாகத் தெரியுமா?..." அவளது கேள்விகளை அவனை அவளது பக்கம் ஈர்த்தன.

"ஓரளவுக்கு முடியும்.... படிச்சிருக்கிறன்... பாஸ் பண்ணியும் இருக்கிறன்..." விட்டு விட்டுப் பேசினான்.

"ஏன் அத வைத்து மேலும் படிச்சி, நல்ல வேலை எடுக்கவியலாதா?"

"முடியாமல் இல்ல; படிப்ப கொன்டினியு பண்ணுவதற்கு தடை போட்டிருக்கிறாங்க... அகதியாக இருப்பவங்க படிக்க முடியாது..." என்றான்.

(17ம் பக்கம் பார்க்க)

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ராதா பெரிசான பின்".. சிறுகதை வித்தியாசமான கருவைக் கொண்டு அமைந்துள்ளது. முழுவிபரங்களும் தெரியப்படுத்தப்படாததால் ஒரு பெண் தனது இயற்கை மாற்றத்தைப் பார்த்துப் பயப்படுவது நன்ருகச் சித்தரிக்கப் பட்டுள்ளது. தங்களுடைய விருப்பத்துக்கு மாருக நடைபெறும் கொண்டாட்டத்துக் கெதிராக எப்படிப் போராடி அவர்கள் வெற்றிபெற்ருர்கள் என்பதையும் எழுதியிருக்கலாமே?

— த. வாசகர் —
லுப்பெற்குல்

தைமாத இதழில் உழவர்தினம்; அதாவது தமிழர் திருநாள் பற்றி ஓர்வரிகூட எழுதப்படாமல் இருட்டடிப்பு செய்யப்பட்டது ஏன்?

"ராதா பெரிசான பின்..." கதையில் ராதாவினதும், அக்காவினதும் வாயிலாகச் சில புதிய கருத்துக்களைக் கூறியிருக்கிருர். அவற்றை வரவேற்கும் அதேவேளையில் பெண்ணின் பருவமாற்றம், அதாவது இயற்கை நிகழ்வுகளை அப்பட்டமாக வர்ணித்திருப்பது அருவருப்பாகவுள்ளது. பட்டும் படாமலும் மறைமுகமாகவுரைப்பதில் வாசகர் இரசனை கூடுமல்லவா? இப்படியே போனல் மனிதனுக்கு ஆடையே தேவையில்லை. இயற்கையாகப் பிறந்த மேனியுடன் வாழலாம் என்று எழுதுவார் போலிருக்கிறது. எல்லாவற்றையும் சொன்ன கதாசிரியர் ஒரு பெண்பிள்ளை பருவமாற்றம் அடைந்தவுடன் அவருக்கு சத்துள்ள நல்ல ஊண் கொடுத்து உடல்நலம் வருங்காலங்களில் வளமுடனிருக்க ஒருமாதகாலம் வரை நோயாளியைப் போல் பராமரித்துப் பாதுகாக்கிருர்கள் பெற்ரேர் என்பதை ஏன் வலியுறுத்திச் சொல்ல மறந்துவிட்டார்?

— திருமதி. ஆ. நாகலிங்கம் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" பார்த்தீபனின் சிறுகதை " தலையங்கத்தை அழகாக எழுதி விட்டு உள்ளே இயற்கை நிகழ்வுகளை அப்பட்டமாக எழுதியிருப்பது அருவருக்கத்தக்க செயலாகும். உண்மைகள் நிர்வாணமானவை எனக் கருதிக் கொண்டு இப்படி எழுதினால்தான் பெண்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? சில சம்பவங்களை மறைமுகமாக எழுதும் போதுதான் வாசிக்க இனிமையாக இருக்கும். தயவுசெய்து இனிமேலாவது இப்படி எழுதுவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

— நா. நிருபா —
காகன் – 7.

" ராதா பெரிசான பின் " கதையில் சுதந்திரங்கள் எப்படிப் பறிபோகின்றன என்பதை அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பெண்ணின் விருப்பமில்லாமல் தமது அந்தஸ்தை வெளிப்படுத்த பெற்றோர்களால் எடுக்கப்படும் விழாக்கள் ராதா போன்றவர்கள் உணர்ந்தால் நிறுத்தப்படலாம்.

— உமா சாலிகா —
கிருட்காபிட் – 1.


---

நமது குரல் சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற ஆக்கங்களைப் பிரசுரிப்பதற்காக எழுத்தாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கிறது. இளம் எழுத்தாளர்களை தூண்டும் அதே வேளையில் " இலைமறை காயாக " இருக்கும் பண்பட்ட எழுத்தாளர்களை வெளிக்கொணர விரும்புகிறது. வாசகர்களின் அன்பான விமர்சனங்களையும் மகிழ்வுடன் வரவேற்கிறது.

---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே.
ஆக்கங்களுக்கு அவற்றின் ஆக்கதாரர்களே பொறுப்பு

■ உங்கள் [illegible]
இரகசியமாக வைத்திருக்காதீர்கள்.
[illegible]
[illegible]
[illegible] இருங்கள்
[illegible]

www.tamilarangam.net

# நமதுகுரல்

இச்சஞ்சிகை மேற்கு உலக நாடொன்றைச் நிறுவனத்தி-னரின் உதவியுடன் மாத-மொருமுறை இலவசமாக வெளியிடப்படுகிறது

ஹேர்ண- பெண்கள் வட்டம் அமைப்பின் சார்பில் வெளியிடப்படுகிறது.

தொடர்புகளுக்கு:

FRAUEN KREIS
INFORMATION ZENTRUM
DRITTE WELT
OVERWEG STR 31
4690 HERNE 1.
TELEFON: 02323 496970/74

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்